செய்தி வெளியீடு எண்:272 நாள் : 08.06.2016

# செய்திக் குறிப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபன்மையினர் நலத்துறையின் திட்டப்பணிகளின் செயல்பாடு குறித்து, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் திருமதி. எஸ்.வளர்மதி அவர்கள் தலைமையில் அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் அலுவலர்களின் ஆய்வுக்கூட்டம் 8.6.2016 அன்று சென்னையில் நடைபெற்றது. அப்பொழுது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதாவது, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையின வகுப்பினரின் கல்வி, சமூகம் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கு பல்வேறு ஆக்கபூர்வமான நலத்திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் அரசு செயல்படுத்திவருகிறது. இத்துறையின் திட்ட பயன்கள் உரிய நேரத்தில் உரிய மக்களை சென்றடையும் விதத்தில் செயலாற்றிட வேண்டும் என்றும் இதற்காக பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் திறம்பட பணியாற்றிட வேண்டும் எனவும் வலியுறுத்தினார்கள்.

வாடகை கட்டடங்களில் இயங்கிவரும் அனைத்து விடுதிகளுக்கும் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு ஏதுவாக தகுதியான நிலங்களை தேர்வு செய்யவும் அனைத்து விடுதிகளையும் மாதந்தோறும் ஆய்வு செய்து அவை நல்ல முறையில் செயல்படுவதை உறுதிசெய்யவும், மாணவர்களுக்கு பாதுகாப்பான, சுகாதாரமான இருப்பிடம் மற்றும் தரமான உணவு கிடைப்பதை உறுதி செய்வதன்மூலம் அவர்கள் கவ்வி கற்பதில் உயர்ந்த சாதனை படைத்திட வழிவகுக்க வேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை தாமதமின்றி கிடைப்பதை உறுதி செய்ய கேட்டுக்கொண்டார்கள். பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் இன மக்களுக்கு விலையில்லா வீட்டு மனை வழங்குதல், விலையில்லா தையல் இயந்திரம், சலவைப் பெட்டி வழங்குதல் மற்றும் நரிக்குறவர் / சீர்மரபினர் வாரிய உறுப்பினர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் முனைப்புடன் நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள். இத்துறைக்கு நடப்பாண்டில் செய்யப்பட்டுள்ள ரூ.1034.85 கோடி ஒதுக்கீட்டினை முழுமையான அளவில் பயன்படுத்தி துறைக்கும் அரசுக்கும் நற்பெயர் ஈட்டித்தந்திட கேட்டுக்கொண்டார்கள்.

தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டு கழகம் மூலமாக இதுவரை இல்லாத அளவில் நடப்பாண்டிற்கு ரூ.100 கோடி ஒதுக்கீடு பெறப்பட உள்ளதால் கூடுதல் பயனாளிகள் சிறுதொழில் புரிய கடன்பெறும் வகைக்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே கடந்த ஆண்டைவிட டாப்செட்கோ மூலம் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்ட இன மக்களுக்கு வழங்கப்படும் கடன் உதவி திட்டங்கள் விரைவுப்படுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டு கழகம் மூலமும் நடப்பாண்டிற்கு ரூ.35 கோடி ஒதுக்கீடு பெறப்படவுள்ளமையால் சிறுபான்மையின பயனாளிகள் கூடுதல் அளவில் பயனடைய சீரிய முறையில் மாவட்ட அலுவலர்கள் செயலாற்றிட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்கள்.

ஆய்வுக் கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் (பொ) திரு. த. உதயச்சந்திரன், இ.ஆ.ப., சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர்/ஆணையர் திரு. தயானந்த் கட்டாரியா, இ.ஆ.ப., பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை ஆணையர் திரு. மா.சந்திரசேகரன், இ.ஆ.ப., மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர் திரு. T.P.ராஜேஷ், இ.ஆ.ப., இணை இயக்குநர், (க.சீ) மதுரை மற்றும் அனைத்து மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**